4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 256/2021 நாள்: 31.10.2025 வா.சா.1 – சீனிவாசன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

இந்த வழக்கில் 2வது வாதி எனது மனைவி என்றால் சரிதான். நான் வழக்கறிஞராக 20 ஆண்டுகளாக உடுமலைபேட்டை நீதிமன்றங்களில் பணியாற்றி வருகிறேன். எனது வீட்டை அடுத்து மேல்புறத்தில் 2 அடி அகலமுள்ள சொத்து எனக்கானது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 2 அடி சந்துக்கு மட்டும் வழக்கு போட்டதாக வழக்கு சொத்தில் குறிப்பிடவில்லை என்றால் என் மொத்த சொத்தையும் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன், தனியாக 2 அடி சந்து என குறிப்பிடவில்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி 2 அடி அகலமுள்ள சந்தை தவிர, அதை ஒட்டி கிழபுறமுள்ள சொத்தை பொறுத்து எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே எந்தவித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தின் மதிப்பு வழக்கு தாக்கல் செய்யும் போது ரூ.3 கோடி மதிப்புடையது என்றால் சரியல்ல, ரூ.1 கோடி மதிப்புடையது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி ரூ.1 கோடி மதிப்பு இடம் மற்றும் கட்டிடத்திற்கு சேர்த்து தான். ரூ.1 கோடி மதிப்புடைய இடமும், கட்டிடமும் சேர்த்து எனக்கு தான் பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு உரிமைபட்ட ஆவணங்களில் மேற்படி 2 அடி அகலமுள்ள சந்து பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சாட்சி நான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டும் போது எனது கட்டிடத்தின் சுவரை பராமரிப்பதற்காக 2 அடி சந்தை நான் விட்டதால் அது பற்றி ஆவணங்களில்

துலங்காது என்று கூறுகிறார். என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 8வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.155/2014 (198/2025) வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் பி.சா.ஆ.**1** ஆகும். மேற்படி ஆணையர் அறிக்கையின் வரைபடத்தில் எனது சொத்திற்கும், 1 முதல் 7 பிரதிவாதிகள் சொத்திற்கும் இடையே உள்ள 3 அடி அகலமுள்ள சந்தை சேர்த்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எனது கட்டிடத்திற்கு மேல்புறம் உள்ள 2 அடி அகலமுள்ள சந்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் உரிமை கோருகிறேன். என்னுடைய வாதத்தையும், 8ம் பிரதிவாதியின் வாதத்தையும், உடுமலைபேட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கேட்ட பிறகு, ஆணையாளர் அறிக்கையை தாக்கல் செய்த பிறகு, இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில், மேற்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை 8ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தான் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி உத்தரவு என்னிடம் காட்டப்படுவது தான். மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பி.சா.ஆ.**2** ஆகும். மேற்படி உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி அது பற்றி தற்போது தெரியவில்லை என்று கூறுகிறார். மேற்படி சந்தில் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவின் அடிப்படையில் நான் செல்வதில்லை என்றால் சாட்சி நான் செல்வதற்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதால் நான் போகவில்லை என்று கூறுகிறார். மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை 8வது பிரதிவாதிக்கு சாதகமாக பிறப்பிக்கப்பட்ட பிறகு நான் அசல் வழக்கு எண்.14/2015 என்ற எண்ணில்

உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் வழக்குரை தான் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். சந்திரன் வகையறா என்பவர்கள் எங்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.224/2014 என்ற வழக்கை உடுமலைபேட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அதனுடைய வழக்குரை நகல் தான் வா.சா.ஆ.10 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சந்திரன் வகையறா மேற்படி சந்தையும் தாண்டி எனது கட்டிடத்திற்கு உள்ளும், தங்களுக்கு உரிமையிருப்பதாக கோரி 1 முதல் 7 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.14/2015 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.155/2014, 224/2014 வழக்கையும் தாக்கல் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் மேற்படி சந்தில் எனக்கு உரிமையிருப்பதாக கோருயிருக்கிறேன். பிரதிவாதிகள் அவர்கள் தாக்கல் செய்த வழக்கில் அவர்களுக்கு உரிமையிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.31 14:31:04 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.